தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 207/2023

LW : 2, PW : 3

07.04.2026

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. அபிராமி | க / பெ. | திரு. வெங்கடேசன் |
| கிராமம் | : | விஷ்ணுதோப்பு , புலிவலம் | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | வீட்டுக்குடித்தனம் | வயது | 26 |

**எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திருமதி. அபிராமி என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.**

முதல்விசாரணை

நான் திருவாரூர் மாவட்டம் விஷ்ணுதோப்பு, புலிவலத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சி வெங்கடேசன் எனது கணவர் ஆவார். சாட்சி கணேசன் எனது மாமனார் ஆவார். சாட்சி ஜெயகரை தெரியும். கடந்த 23.10.2020 ந் தேதி மதியம் எனது மாமனாருக்கும் எனது நாத்தனார் சுபாஷினி கொழுந்தனாருக்கு இடையே சண்டை நடந்தது. எனது கணவர் வேலை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தவுடன் சண்டை குறித்து நான் அவரிடம் சொன்னேன். நானும் எனது கணவரும் சேர்ந்து இரவு 12.00 மணியளவில் எனது நாத்தனாரின் கொழுந்தானரிடம் சண்டை குறித்து கேட்க சென்றோம்.

எனது கணவரும் உறவினர்களும் வாய் வார்த்தையாக பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது ஆஜர் எதிரி இரும்பு பையை எடுத்து வந்து என் கணவரின் தலையில் அடித்தார். எனது கணவர் சத்தம் போட்டவுடன் அங்கு உள்ள நபர்கள் தடுக்க வந்தார்கள். ஆஜர் எதிரி என் கணவரை பார்த்து உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டி, கெட்ட வார்த்தைகளால் திட்டினார்.

காயம்பட்ட என் கணவரை சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை போலிசார் விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன். 2020 வருடம் கொரோனா பாதிப்பு உச்சத்தில் இருந்தது என்றால் சரிதான். அப்போது தமிழக அரசால் ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்தது என்றால் சரிதான். நாத்தனார் சுபாஷினியின் கொழுந்தனார் பெயர் மகேந்திரன் என்றால் சரிதான். நான் மகேந்திரனின் அக்கா மகள் என்றால் சரிதான்.

மேற்படி மகேந்திரனுக்கும் எனது மாமனாருக்கும் சொத்து பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. எதிரி கேஸ் ஏஜென்சியில் வேலை பார்த்து வருகிறார், அவர் கேஸ் ஏற்றிவர பயன்படுத்தும் வாகனத்தை எனது வீட்டு அருகே நிறுத்திவைப்பார் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு தலையில் அடிப்பட்டு அவரது ஆடையில் இரத்தக்கரை படிந்தது என்று சொன்னால் சரிதான். இரத்தக்கரை படிந்த அந்த ஆடைகளை போலிசார் வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான்.

எனது கணவர் அரசு மருத்துவமனைக்கு சென்றவுடன் அங்கு போலிசார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த புகார்

வாக்குமூலமான அ.த.சா.ஆ 1 ல் நானும் என் மாமனாரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். எனது கணவரை தாக்கியதாக சொல்லப்படும் இரும்பு பையை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் அது எனக்கு தெரியாது. அ.சா.1 எனது கணவர் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எங்களின் உறவினர் மகேந்திரன் என்பவருக்கும் அ.சா.1 எனது கணவர் வெங்கடேசனுக்கும் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் எனது கணவர் கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்தை மகேந்திரன் எனது உறவினர் என்ற காரணத்தால் அவர் மீது புகார் கொடுக்காமல் எதிரி மீது எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்லும் காலம் கொரோனா காலம் என்பதாலும், ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்ததாலும் நான் சொல்வது போல் சம்பவம் நடக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரியின் வாகனத்தை அவரது வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்ததால் ஏற்பட்ட முன்விரோத காரணத்தை வைத்துக்கொண்டு எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவம் நடைபெற்றதாக தேதியில் எதிரி சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது கணவர் என்ற காரணத்தால் அவர் சொல்லி கொடுத்த அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.07 18:39:09 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 207/2023</u>

<u>LW : 4, PW : 4</u>

<u>07.04.2026</u>

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஜெயகர் | த / பெ. | திரு. சங்கர் |
| கிராமம் | : | விஷ்ணுதோப்பு , புலிவலம் | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | AC மெக்கானிக், ஓட்டுநர் | வயது | 44 |

<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திரு. ஜெயகர் என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.</u>

<u>முதல்விசாரணை</u>

நான் திருவாரூர் மாவட்டம் விஷ்ணுதோப்பு, புலிவலத்தில் வசித்து வருகிறேன். நான் AC மெக்கானிக் மற்றும் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சி வெங்கடேசன் எனது நண்பர் ஆவார். சாட்சிகளான அபிராமி மற்றும் கணேசன் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 23.10.2020 ந் தேதி வழக்கம் போல் வெங்கடேசன் என்பவர் வீட்டிற்கு அவரை பார்ப்பதற்காக சென்றிருந்தேன். வெங்கடேசன் என்பவரின் வீட்டின் வாசல் அருகே சத்தம் கேட்டது. வெங்கடேசன் என்பவர் வீட்டிற்கு வெளியே வந்தார். நான் வெளியே வந்து பார்த்தபோது சண்டை நடந்து கொண்டிருந்தது.

சண்டை ஆஜர் எதிரிக்கும் எனது நண்பர் வெங்கடேசன் என்பவருக்கும் இடையே நடந்தது. ஆஜர் எதிரி வெங்கடேசனை கம்பியால் தலையில் அடித்துவிட்டார். நானும் கணேசனும் சத்தம் போட்டு சண்டையை

விலக்கிவிட்டோம். காயம் பட்ட வெங்கடேசனை திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவ காலம் கொரானா காலம் என்றால் சரிதான். அப்போது தமிழக அரசால் ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு பக்கத்து தெருவான சாந்தா நகரில் குடியிருந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் போனதாக சொல்லும் தேதியன்று இரவு 08.00 மணி இருக்கும். நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் வெங்கடேசன் வீட்டின் உள்ளே இருந்தேன். வெளியில் ஒரே கூட்டமாக இருந்தது என்று சொன்னால் சரிதான்.

மகேந்திரன் என்பவருக்கும் வெங்கடேசன் என்பவருக்கும் முன்விரோதம் இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ நேரத்தில் மகேந்திரனும் அவரது உறவினர்களும் வெங்கடேசன் வீட்டில் பிரச்சனை செய்தார்கள் என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனைக்கு என்னுடைய இருச்சக்கர வாகனத்தில் வெங்கடேசனை அழைத்து சென்றேன். போலிசார் என்னை சம்பவத்தின் மறுநாள் விடியற்காலை விசாரித்தார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

இன்று நீதிமன்றத்திற்கு வெங்கடேசன் வந்துள்ளார். வெங்கடேசன் எனது நண்பர் என்பதால் அவர் சொல்லி கொடுத்தது போல் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ தேதி கொரானா காலம் என்பதால் மக்கள் நடமாட்டம் இல்லாத வேளையில் அ.சா.1 வெங்கடேசனிற்கும் மகேந்திரன் என்பவருக்கும் ஏற்பட்ட தள்ளுமுள்ளு சண்டையில் மகேந்திரன் உறவினர் என்பதால் ஆஜர் எதிரிக்கு எதிராக

வெங்கடேஷ் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.04.07 18:39:19 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 207/2023</u>

<u>LW : 6 PW : 5</u>

**<u>07.04.2026</u>**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செல்வராஜ் | த / பெ. | திரு. பக்கிரிசாமி |
| கிராமம் | : | விஷ்ணுதோப்பு , புலிவலம் | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | இராணுவ ஓய்வு | வயது | 68 |

**<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திரு. செல்வராஜ் என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் திருவாரூர் மாவட்டம் விஷ்ணுதோப்பு, புலிவலத்தில் வசித்து வருகிறேன். நான் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். சாட்சி சிவா எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 4 , 5 வருடங்களுக்கு முன்பாக என் வீட்டிற்கு பக்கத்து வீட்டு அருகே சத்தம் கேட்டது. மறுநாள் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து கொண்டிருந்தார்கள். போலிசார் சம்பவத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். படம் வரைந்து என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். **பார்வை மகசர் அ.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னிடம் கையெழுத்து கேட்ட போலிசார் பெயரோ, என்ன பதவியோ வகித்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் கையெழுத்து வாங்கிய தாளில் என்ன எழுதப்பட்டிருந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது என்பதையும் அதற்கான வரைப்படத்தையும் வரைந்திருந்தார்கள். சம்பவத்தை நான் கண்ணால் பார்க்கவில்லை. எந்த வரிசையில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் நான் பார்த்தேன்.

அந்த விவரத்தை எழுதிய போலிசாரின் விவரங்கள் எனக்கு தெரியாது. வெங்கடேசன் எனது வீட்டின் அருகே இருப்பவர் என்பதாலும், என்னை நீதிமன்றத்திற்கு செலவு செய்து அழைத்து வந்து வெங்கடேசன் என்பவர் என்ற காரணத்தாலும், அவர் சொன்னது போல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் பார்வை மகசர் மற்றும் வரைப்படம் தயார் செய்துள்ளபோது நான் அங்கு இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின் மறுநாள் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.07 18:39:27 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்